

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு மாசி மாதம் மாதம் 2 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ஆம் நாள் திங்கள்கிழமை**

**அதிகாரம் : இல்வாழ்க்கை - குறள் எண் : 46**

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ எவன்.

**குறள் விளக்கம்**

அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை, வேறு நெறியில் சென்று பெற்றிட இயலுமோ? இயலாது.

பழமொழி ( Proverb )

***A little string will tie a little bird***

**சிறு துரும்புத் பல் குத்த உதவும்**

பொன்மொழி

பிறவுயிர்களைப் பாதுகாப்பதே சிறந்த விரதமாகும்

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. மைக்ரோ போனை கண்டுபிடித்தவர்? பெர்லினர்
2. சினிமா லென்ஸை கண்டுபிடித்தவர்? ஜூன்லுமியர்

தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

*Do you get it?* உங்களுக்கு அது இருக்கிறதா ?

*Are you with me?* நீங்கள் என்னுடன் இருக்கிறீர்களா ?



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- ஐ.பி.எம்., நிறுவனம் அமைக்கப்பட்டது(1924)
- ஈ.என்.ஐ.ஏ.சி., என்ற முதல் தலைமுறை கணினி அறிமுகமானது(1946)
- 103வது தனிமமான லோரென்சியம் கண்டுபிடிக்கப்பட்டது(1961)
- ஆஸ்திரேலிய பவுண்டிற்கு பதிலாக ஆஸ்திரேலிய டாலர் அறிமுகப்படுத்தப்பட்டது(1966)

### இன்றைய செய்திகள்

⇒ காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டம் தொடர மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

⇒ உத்தரகாண்ட், கோவா சட்டசபைக்கு இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. உத்தரபிரதேசம் 2-ம் கட்ட வாக்குப்பதிவை சந்திக்கிறது.

⇒ குடும்பத் தலைவிகளுக்கான உரிமைத்தொகை விரைவில் வழங்கப்படும் என திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் கூறியுள்ளார்.

⇒ தமிழகத்தில் நேற்று 2,296 பேருக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

⇒ தமிழகத்தை சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுப்படுத்துங்கள் என்று பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

⇒ சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக முனிஸ்வர் நாத் பண்டாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவி ஏற்பு விழா, கிண்டி கவர்னர் மாளிகையில் இன்று காலை 10:00 மணிக்கு நடக்கிறது

⇒ சென்னை வந்த துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவை, கவர்னர் மேதகு ரவி அவர்கள் வரவேற்றார்.

⇒ 12 முதல் 18 வயதினருக்கு ‘கோர்பேவேக்ஸ்’ தடுப்பூசி அவசரகால பயன்பாட்டு அனுமதிக்கும் படி இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டு அமைப்புக்கு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.